13/5
பொதுசன நூலகம்
-7 MAY 2007
யாழ்ப்பாணம்.

SEND IN YOUR NEWS TO

THE EDITOR
THE MORNING STAR
No. 17, Frances Road,
Colomob-06,
Sri Lanka.

# The Morning Star
# உதயதாரகை
Uthayatharakai

*Registered as a News Paper at the General Post Office, Sri Lanka*

*Established 1841, A Christian Fortnightly Published Every other Friday*

**Vol. 175 - Jaffna - Friday December 22 2006 No.05**

*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people*

THE MORNING STAR

| | | |
|---|---|---|
| **Foreign:** | | |
| Annual Subscription | | $ 10.00 |
| Life Subscription | | $ 100.00 |
| **Local:** | | |
| Annual Subcription | | Rs.100.00 |
| Life Subcription | | Rs.1000.00 |

THE MORNING STAR
No. 39, Fussels Lane,
Colomob-06,
Sri Lanka.

EDITORIAL

# Advent –Season of Reconciliation

The name Advent comes from the Latin words, *advenire* (to come to) & *adventus* (an arrival), and refers to Christ's coming into this world. It is that period of the year during which the Church requires the faithful to prepare for the celebration of the Feast of Christmas, the anniversary of the birth and coming of Jesus Christ.



However, for the church in Sri Lanka the season of advent brings back the memories of the monstrous waves of tsunami which took away the lives of thousands, the present situation of the breaking down of the 'peace talks into pieces', abductions, starvation in Jaffna peninsula, cycle of displacement in the East, the 'silent war' that takes away the lives of many young souls daily, and on the top of everything the epidemic 'chicken guinea' makes one feel hard to comprehend the meaning of the advent.

Again, on top of everything the struggle within the church, the maximum humiliation done to the servant of God, the dejection, the petty politics, and frustration experienced because of the failure of all the attempts to bring unity, the harsh words like, "we love you because Jesus said that we should love the sinners', thrown at the face of God's chosen ones, the heartaches, the psychic wounds make it even harder to experience the spirit of Christmas.

The basic belief which controls the Church's worship and its way of living is that God became human in order that human might become like God. The purpose of the divine experiment was reconciliation, the reconciliation of God and human and of human as God is with human as he ought to be. This central Christian conviction leads, its adherents believe, to an authentic way of life which is not unnatural because it is God's way; the supernatural is the supremely natural. Christ's words 'Father, forgive them for they know not what they do,', as he was being crucified and finally giving up his life, reveal human at his most glorious as well as God at his most forgiving.

The Christian forgiveness reaches its climax in the story of Cross and Resurrection, when God's forgiving love was seen in its fullness in one man. In all ages human have looked for love and feared loneliness and revered those who could enlarge their capacity for love. This unending search for love was over, for Jesus had been uniquely generous and uniquely self giving. All the New Testament writings are attempts to describe this reconciling approach to life. To be a member of the Church, so the New Testament insists to share this conquering and suffering love of Christ. There are no other rules and all the creeds and cannons and conditions are secondary, sometimes helpful, sometimes not. That God was in Christ reconciling must never be understood but the Christians only as a historical statement of what happened nineteen hundred years ago – unless it is actually true of lives today.

It is note worthy to mention Christ's remark about forgiveness to seventy times seven, is a warning that to be reconcilers we may have to give up our desire to do a quick job, perhaps to satisfy our ego or our impatience, in order to devote ourselves to the slow development of a personal relationship which will finally bridge the gap. Did Jesus Christ as a matter of fact stand for unlimited reconciliation, either in his teachings or his conduct? We are told that when no one would answer his question, 'Is it permitted to do good or to do evil on the Sabbath, to save life or to kill?' he looked at them with anger and sorrow at their obstinate powers of lovelessness stirred him deeply because he felt that the hardness of their hearts prevented them from recognizing God's gracious work in him. 'Reconciliation is a struggle and those who resist have to be fought', says Alan Webster'.

One of the discoveries the Church is making today is its need to be more creative if it is to be open to the reconciling love of god and able to be a base for reconciliation itself. The essential task in reconciliation will always bring the crucified and risen Christ before them including those who do not explicitly belong to the church. One of these, Dag Hammer – skjold, in his *Markings* reminds us constantly the returning to the theme of divine reconciliation as the one hope of the future, the way in which we say 'yes' to our neighbour and to destiny:

> *Jesus' lack of moral principles. He sat at meal with publicans and ninners, he consorted with harlots. Did he do this to obtain their votes or did he think he could convert them by such 'appeasement'? or was his humanity rich and deep enough to make contact even in them, with that in human nature which is common to all men, indestructible, and upon which the future has to he built?.. so shall the world be created each morning anew, forgiven – in Thee, by Thee'.*

Let this new insight of the concept of reconciliation during this season be in our hearts. Reconciliing with our fellow human beings, even if we have differences of opinion in the church, among ethnic groups, and even with the nature will certainly prepare us for the real advent that the 'whole creation awaits', which is the second coming of Jesus Christ. The focus of Advent is by no means limited to just Christ's first coming. An equal, if not more important theme found in the Advent Liturgy is the Second Coming of Christ when He comes again to judge the world.

- Thaya

## Ushering in Christmas Breeze

The spirit of Christmas was ushered in this year too by "Mathura Strings" on Sat. 2nd Dec. at 6.30p.m. at the C.S.I. Church, Colombo. The theme was "Praising God with strings and flute". (Psalm 150 1 and 4)

This orchestra is held every year by Mr. Issac Kulendran in remembrance of his mother Mrs. Mathuram Kulendran, who having led a virtuous life, dedicated herself to the betterment of Church music.

The Mathura Strings Ensemble was specially trained by Mr.Kulendran. The programme included violin recitals to the accompaniment of the piano, cello, flute and solo performances. The congregation joined in singing the old time favorites with great enthusiasm.

The ensemble performed extremely well and received the applause of everyone.

We thank God for the wonderful talent given to Mr. Kulendran to serve the Lord though music.

*When Jesus was born, some people welcomed Him; some ignored Him; and some rejected Him. There was no room for Him at the inn in Bethlehem, so the Son of God was laid in a manger where animals stayed. Even today, some people welcome Christ and some ignore or reject Him. Jesus came to earth to be our Savior and to die to pay the penalty for our sins. Here is how you can welcome Christ as your Lord and Savior into your life.*

Jesus died for somebody's sins, but not mine.
- Patti Smith

A Christian is God Almighty's gentleman.

He who is to be a good ruler must have first been ruled.
- Aristotle

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *JAFFNA WELCOMES THE NEW BISHOP*

The newly consecrated Bishop of the Church of South India, the Rt. Rev. Dr. Daniel Selvaratnam Thiagarajah visited Jaffna on the 2nd of Dec. 2006. He was accorded a very warm welcome by the commanding officer of the Armed Forces in Jaffna, Major general G.L.Chandrasiri, the Deputy General of Police Jaffna and other high ranking officials of his arrival at the Palaly Airport.

At the reception that followed thereafter, the officials briefed the Bishop on the pre4sent situation in Jaffna.

### The Service of Installation and Holy Communion



On Sunday 03-12-2006, the 1st day of advent the Jaffna Diocese accorded a grand reception at the Vaddukodai Cathedral Church to our new Bishop. Over 2000 people from the different parishes fathered



on this memorable, happy day to witness this grate event, a milestone in the history of the diocese.

At this special service, the "Bishop staff" was ceremonially handed over to the new Bishop the 4th Bishop in line, by the 3rd Bishop, Rt. Rev. Dr. Jebanesan. Thereafter as customary, he was led to the Bishop's chair several pastors of the Jaffna diocese assisted the new Bishop during Holy Communion.



The service was followed by a grand reception presided over by Rt. Rev.Dr. S. Jebanesan, Mr.Annapah Jeyarajah, staff Jaffna College delivered the vote of thanks. All were invited to a fellowship breakfast after the function.

### Meeting of the Executive Committee

On the 5th of Dec. at 4 p.m. the 1st executive committee presided over by the new Bishop met at the Diocese Conference Hall.

The committee comprised of 27 elected members. Mr.N.A.Vimalaendran, Principal, Jaffna College was elected secretary. He is also a member of the synod executive committee.

Several issues were taken up for discussion and decision reached. This committee will function till the convening of the Diocesan Council. It was felt that this new committee under the leadership and guidance of the new Bishop. With fulfill a long felt need of the people of the Jaffna Diocese and soon help in solving the current problems.

### The Bishop Meets the Parishes

On 06.12.2006 at 4p.m. a service of Thanks giving and Holy Communion was Conducted by he New Bishop at the Tellipalai Church. It is the 1st ancestral church to be founded by the Missionaries. The service was well attended by many of the pastors, Mr. Jesupalan, a long standing member, members of the there Armed Forces and many others. It was followed by tea and refreshments. On the request of our new Bishop, the chief of staff of the Armed Forces promised to renovate the Tellippalai Church and cemetery, which were in a very deplorable state and brings back memories of its former beauty.

On the 10th of Dec. the Bishop conducted the service at the Chavakacheri Church followed by a function jointly organized by the Chavkacheri and Usan Churches too honour the New Bishop. Mrs. Maharatnam and Dr. V.R.Dvid welcomed the Bishop on behalf of the Usan and Chavakacheri churches. Bishop Jebanesan and Rev. Vasanthakumar too spoke at the function. A fellowship breaks fast followed.

On the 17th Dec, the Bishop delivered the sermon at Araly Church conducted by Rev. Asokumar. The parishioners welcomed the Bishop with much enthusiasm.

### Other Events

On 7th Dec. Jaffna College Technical Institute and the Agricultural Institute jointly organized a felicitation at the Abel Hall for the New Bishop Rt. Rev. Dr .Thiagarajah. It was presided over by Mr. Kugathasan, Principal of the Agricultural Institute. Rev. S. Jebanesan, the President of the Board of Directors, the Director of the Technical Institute, Mr. Noel Hoole, Mr. Rajkumar Teacher, Principal Mr.Kugathasan and mr.Kanthasamy, Senior Lecturer at the Technical Institute, welcomed and congratulated him on his new appointment. The Bishop in his reply thanked the organizers of both institutions.

On the 10th the Bishop participated at the Festival of Carols conducted by Jaffna College. He led the congregation in prayers and pronounced the benediction.

On the 8th the Bishop attended a meeting of the Board of Director of Jaffna College.

### Strengthening the Bonds

On 06.12.2006 at about 10.00 a.m. the Bishop Thiagarajah was felicitated by the Jaffna University Officials. He was welcomed by the Vice chancellor Prof. Kumaravadivel, the Dean Prof. Kandasamy and Prof. Siva Chandran. A discussion took place on different issues. This meeting has strengthened the bond between the Jaffna Diocese and the University.



As a mark of respect the Bishop met the Catholic Bishop. Dr. T. Savundaranayagam, Dr. Thangammah Appakutty, the Trustee of Dhurga Thevarthanam, Somasundaraparam Sariya Swamihal of trustee of Nallai Atheenamam and Archdeacon of the Anglican Church Rev. S.P. Nesakumar. He discussed with them in length the measures to be adopted jointly by the religious denomination to bring in peace. Bishop Sarundaranayagam made a presentation to the newly elected Bishop while the trustee of the Nallai Atheenam honored him with a "Ponnadai"

### The Jaffna University Christian Union

The Executive committee of this union represented by the Methodist Anglicaw and the C.S.I. churches took place on the 14th of Dec. 2006. Bishop Rt . Rev. Dr. Daniel Thiagrajah presided over at this meeting having been elected as President of the current year. It should be mentioned that Rev. V.S. Pathmathayalan serves as the chaplain of the University.





Management is doing things right; leadership is doing the right things. - Peter F. Drucker

A faithful and good servant is a real godsend; but truly 't is a rare bird in the land. - Martin Luther

The law of heaven and earth is life for life. - Lord Byron

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp] நூலகம் யாழ்ப்பாணம் - 7 MAY 2007

# ☆ உதயதாரகை

22 மார்கழி 2006

*உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும்,*
*அதைப் பின்பற்றிச் செல்.*
*கோழையாகவும், வேடதாரியாகவும்*
*இருக்காதே.*
*-விவேகானந்தர்.-*





"உன்னதத்திலே இருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிஷர்மீது பிரியமும் உண்டாவதாக"

"உங்கள் அனைவருக்கும் உதயதாரகையின் இனிய நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்."

## ஆசிரியர் தலையங்கம்:
## இருண்ட எமது தேசத்தில் ஒளியே வருக.....

இன்று எமது தேசம் இருண்டு கிடக்கிறது. வடக்குக்கிழக்கென மனிதஅவலங்கள் மலிந்து கிடக்கின்றன. மீண்டும் வந்த தடைச்சட்டத்தினால் மக்கள் மருண்டு கிடக்கின்றனர். எறிகணை வீச்சுக் களினால் மக்களே நாளும் செத்து மடிகின்றனர். இங்கு ஜனநாயகம் என்பது இன்று மரணப்படுக்கையில் நாட்களை எண்ணுகிறது. ஜனநாயத்திற்காக குரல் கொடுத்தவர்களின் குரல்வளை நசுக்கப்படுகிறது. தேசத்தின் அமைதிக்காக. இனங்களின் ஒற்றுமைக்காக. தமிழ் மக்களின் விடிவிற்காக ஓங்கிக்குரல் கொடுத்த "தமிழ்மகன்" ரவிராஜ் எம்.பியை கடந்த மாதம் பகல்வேளையில். நடுவீதியில் சுட்டுப்படுகொலை செய்தார்கள். அதிகாரத்தில் உள்ளவர்களோ தங்களது கௌரவம். பதவிகளைத் தக்கவைத்தல் போன்ற வற்றிற்காக முழுப்பூசனிக் காயை சோற்றினுள் புதைக்கின்றனர். சர்வதேசமும் அயல்நாட்டுடன் கூடஇருந்து வேடிக்கை பார்க்கிறது. இன்று இலங்கையில் அமைதிப்பணி கேள்விக்குறியாக உள்ளது.

"சமாதான முன்னெடுப்புக்களினால் தான் சமாதானத்தை அடையமுடியும்" என பல உலகத் தலைவர்களுடனும். இலங்கை அரசுடனும் பேச்சுக்களை நடாத்தி தமிழர் தரப்பு நியாயங்களை உலகிற்கு எடுத்துக்கூறிய "தேசத்தின் குரல்" இன்று ஓய்ந்து கிடப்பது. இன்றைய சமாதான விரும்பிகளுக்கு ஒரு பெரும் ஏமாற்றமாகும்.

போர்ப்புலமற்ற பிரதேசங்களில் வாழும் எல்லா மக்களும் யுத்தத்தின் கொடூரவிளைவை நன்கு புரிந்துணர்ந்து. அரசியல் ஏமாற்று வித்தைகளி லிருந்து தெளிவுபெறவேண்டும். அத்தோடு நாட்டின் பெரும்பான்மை மக்கள் விரைந்து மனிதாபிமான உணர்வோடு. வேற்றுமைகளை மறந்து. எமது நாட்டின் சுபீட்சத்திற்காக. சகோதர இனங்களின் விடுதலைக்காக குரல் கொடுத்து. நாட்டில் நிலையான சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு பாடுபட முன்வரவேண்டியது காலத்தின் அவசியமானதாகும்.

இப்போது உலகெங்கும் "இயேசுகிறிஸ்து" எனும் எங்கள் சமாதானப்பிரபுவின் பிறப்பு நினைவுகூறப்பட்டு வருகிறது. அவர் பிறப்பின் காலத்தைப் போன்றே இந்நாட்களிலும் மனிதப்பேரவலங்கள் எமது பிரதேசங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஏ—9. ஏ—15 பாதைகள் மூடப்பட்டுள்ளதால் எமது மக்கள் சொல்லொண்ண கஷ்டங்களுக்குள்ளாகிக் கொண்டுள்ளனர். மீண்டும் மீண்டும் மக்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களையும். உடமைகளையும். உறவுகளையும் இழந்துள்ளனர். மழையிலும். வெய்யிலிலும் மரங்களை நம்பி வாழ்ந்துவரும் எமது மக்கள் எறிகணைவீச்சுக் களினாலும். "சிக்குன் குனியா" எனும் கொடூரக் காய்ச்சலினாலும் செய்வதறியாது தவிக்கின்றனர். நாளுக்கு நாள் எமது மக்கள் செத்துமடிகின்றனர். காணாமல்போகின்றனர்.

கிறிஸ்து பிறப்பின் இன்றைய நாட்களில் மனிதர்கள் யாவரும். ஒருவர் உணர்வுகளை ஒருவர் புரிந்து கொண்டு. ஐக்கிய இலங்கையினுள் ஒரே குடும்பமாக வாழ்வதற்கு சொல்லால் மாத்திரமல்ல செயலினாலும் முன்வரவேண்டும்.

**எஸ். பி. ஜி**

---

### "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்"

தேவனாயிருந்தவர் மனிதனானார்! அவர் மாம்சமும். இரத்தமும் உடைய மனுஷனாகவே எல்லாவிதத்திலும் நம்மைப்போலவே வந்தார்.அவர் தம்மை மனுஷகுமாரன் என்றே அழைத்துக்கொண்டார். தேவ தூதர்கள் மேய்ப்பர்களுக்கு அறிவித்த செய்தியில் உங்களுக்காக இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்றனர். இப்பாலகன் யூதர்களுக்காக மட்டுமல்ல பிற இனத்தவர்களாகிய நமக்காகவும் பிறந்தார். இவர் புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாக வந்தவர் என்று சிமியோன் இப்பாலகனைக் கையில் ஏந்திக்கொண்டு ஆவியின் ஏவுதலால் உரைக்கிறார் (லூக்கா 2"30).

நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். குமாரன் பிதாவோடு நித்திய காலமாய் இருப்பவர். தேவனோடும். தேவனுக்குச் சமமாயும். தேவனாயும் இருப்பவர். எல்லாம் அவரைக் கொண்டும் அவர்மூலமாயும் உண்டாயிற்று. பூமி உண்டாகுமுன்னும் அநாதியாய். அவர் அபிஷேகம் பண்ணப்பட்டவர் (யோவான் 1"1—3. நீதி 8"23.30). அவரைப் பிதா தாமே உலகுக்கு அனுப்பினார். தேவன் அவரை விசுவாசிக்கிறவர்கள் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனைப் பெறும்படிக்கே தன் ஒரே பேறான குமாரனைத் தந்து இவ்வளவாய்த் தேவன் உலகில் அன்பு கூர்ந்தார்.

இயேசுவும். நான் என் சுயமாய் வரவில்லை. என் பிதா என்னை அனுப்பினார் என்று கூறினார். இயேசு ஞானஸ் நானம் பெற்றுக் கரையேறினபோது. பிதா அவரைக் குறித்து ஜூஇவர் என்னுடைய நேசகுமாரன்ஜி என்று வானத்திலிருந்து அறிக்கை செய்தார் (மத்தேயு 3"17). அசுத்த ஆவிகளும்கூட. ஜூநீர் உன்னதமான தேவனுடைய குமாரன்ஜி என்று அறிக்கையிட்டன (மத்தேயு 8"29). சீமோன் பேதுருவும். பிதாவின் வெளிப்பாட்டைப் பெற்றவனாக ஜூநீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துஜி என்ற அறிக்கையைச் செய்தான் (மத்தேயு 16"16). பிரதான ஆசாரியனுக்கு முன்பாக இயேசு விசாரிக்கப்படுகையில் அவர் மறுக்காமல். ஜூநீர் சொன்னபடியே நான் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துதான்ஜி என்று சாட்சி பகர்ந்தார் (மத்தேயு 26"63—64). இயேசு உயிர்விட்டபோது பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு நூற்றுக்கதிபதி பயந்து ஜூமெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்ஜி என்றான் (மத்தேயு 27"54). இந்தக் கிறிஸ்மஸ் நாட்களில் நாம் யாவரும் தேவகுமாரர்களாகுவோம். ஏனெனில். மனிதகுமாரர்களை தேவகுமாரர்கள் ஆக்குவதற்காகவே தேவன் மனிதகுமாரனானார்.

—ஜேம்ஸ்ஜீ

---

பேராயர் அதி.வண. கலாநிதி டானியல் எஸ். தியாகராஜா அவர்கள். 14. 11. 2006 அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து வடக்குக் கிழக்கில் எமது மக்கள் படும் கடினப்பாடுகள். பிரதான பாதைகளைத் திறப்பதன் அவசியப்பாடு. அரசியல் தீர்வின் முன்னெடுப்பு போன்ற விடயங்கள் குறித்து கலந்துரை யாடியுள்ளார். நாட்டின் பெரும் பாலான அரச. தனியார் பன்மொழி ஊடகங்களும் தங்கள் முன்பக்கச் செய்தியாக அவருடைய இச்சந்திப்புக் குறித்து காட்சிப்படுத்தி. செய்தி வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் முன்பு பேராயர் டானியல் எஸ். தியாகராஜா அவர்கள். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்து. நாட்டின் நிலைமைகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

---

## தென்னிந்திய திருச்சபையின் நான்காவது பேராயரின் யாழில் வருகையும், வரவேற்பும்:

தென்னிந்திய திருச்சபையின் நான்காவது பேராயராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அதி வண. அருட்கலாநிதி டானியல் செல்வரத்தினம் தியாகராஜா அவர்கள் கடந்த 02-12-2006 அன்று காலை தனது யாழ் நோக்கிய பயணத்தை மேற் கொண்டார். அவருடைய விமானம் பலாலி விமான தளத்தினை அடைந்த வேளையில் ஆயரை வரவேற்பதற்கு ஆயத்தமாக யாழ். படைகளின் கட்டளை தளபதி மேஜர்ஜெனரல் ஜீ.எல். சந்திரசிறி அவர்களும், யாழ் மாவட்ட காவல்துறை அதிபரும் ஏனைய படை அதிகாரிகளும் கலந்து கொண்டு மிக சிறந்த வரவேற்பினை அளித்து அதன்பின் யாழ் நிலமைகளை ஆயர் அவர்களுக்கு விளக்கி எடுத்துரைத்தனர். கலந்துரையாடலின் பின்னாக தகுந்த ஆயத்தத்துடன் ஆயருக்கான பயண ஒழுங்கினை ஆயத்தம் செய்து கொடுத்தனர்.

### நற்கருணை வழிபாடும், பொறுப்பேற்றல் நிகழ்வும்:

ஆயரின் இவ் வருகையினால் யாழ் திருச்சபைகளின் பொது நிலையினரில் பலரின் முகத்தில் சந்தோசம் மிகவும் களைகட்டிக் காணப்பட்டது. இந்த சந்தோசத்தின் வெளிப்படாக 03-12-2006 அன்று ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையில் உள்ள ஆயரின் ஆசன ஆலயத்தில் திருவருகையின் முதலாம் ஞாயிற்றுக்கிழமைக்கான நற்கருணை வழிபாடும் அத்தோடு இணைந்ததாக முதல் மூன்று ஆயர்களுக்கும் வழங்கப்பட்ட ***"அதிகார பூர்வமான மேய்ப்புப்பணிக் கோல்"*** மூன்றாவது பேராயரால் கையளிக்கப்பட்டு, புதிய ஆயரின் சம்பிராய ஆசனத்தில் இருத்தல் நிகழ்வும் மிகவும் சிறப்புடன் நடைபொற்றது.

இந்நிகழ்வினை கண்டு மகிழ் வுற்று சான்பறுவதற்காக ஆதீனத்தின் பல சபைகனிலும் இருந்து பொது நிலையினர் இரண்டாயிரத்திற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டது குறிபிடப்பட வேண்டிய ஒரு விடய மாகும். நற்கருணை வழிபாட்டின் போது ஆதீனத்தின் பல குருக்களும் ஆயருடன் இணைந்து வழிபாட்டை நடத்துவதற்கு உதவி புரிந்தனர். இந்த வழிபாடுகளில் எல்லாம் எமது முன்னாள் ஆயரும் கலந்து கொண்டது மாத்திரமன்றி வழிபாட்டின் பின்பாக நடைபெற்ற புதிய ஆயரின் வரவேற்பு நிகழ்வின் போது அதனைத் தலைமையேற்றும் நடத்தினார். ஆத்னத்தின் பொருளாளர் திரு. அன்னப்பா ஜெயராஜன் ஆசிரியர் நன்றியுரையுடன் நிகழ்வினை நிறைவு செய்தார். வழிபாட்டிலும் நிகழ்விலும் கலந்து கொண்ட யாவருக்கும் காலை ஆகாரம் வழங்கப்பட்டது.

(மறுபக்கம் பார்க்கவும்)

---

"ஆராய்ந்தறிவதும் சிந்தனை செய்வதும் நம்முடைய உரிமை மட்டுமல்ல. உயர்ந்த கடமையும் கூட... — இங்கர்சால்

"தீயமனிதர்கள் அச்சத்தினால் அடங்கி நடக்கின்றனர். நல்ல மனிதர்கள் அன்பினால் அடங்கியிருக்கின்றனர்." — அர்ஸ்டாட்டில்

"வீட்டிலுள்ள இருளைக்குறித்துக் குறைகூறுவதைவிட ஒரு சிறு விளக்கேற்றி வைப்பது மேல். உலகெங்குமுள்ள கேடுகளைக்குறித்துக் குறை கூறுவதைவிட ஒரு சிறு நலன் செய்வது சிறந்தது.— சார்லஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராயரின் யாழ். விஜயம்

### நிர்வாகக் குழுக் கூட்டம்:

05-12-2006 அன்று மாலை நான்கு மணிக்கு எமது ஆதீனத்தின் கடந்த காலத்தில் ஒரு மேய்ப்பன் இல்லையே, ஒரு நிர்வாக அமைப்பு இல்லையே என ஏங்கிய பலருக்கு ஆறுதலை தருகின்ற ஒரு செய்தியாக செனட் மகாசபையினால் எமது ஆதீன ஆயருடன் இணைந்து நிர்வாக காரியங்களில் ஈடுபடுவதற்காக 27 பேர் அடங்கிய ஒரு நிர்வாக குழுவினை பரிந்துரை செய்திருந்தது. இந்த செனட் மகாசபையே எமது ஆதீனத்திற்கு ஒரு செயலாளரையும் பரிந்துரைத்திருந்தது. இதற்கமைய ஆயரின் தலைமையில் முதலாவது நிர்வாக குழு ஆதீன மாநாட்டு மண்டபத்தில் கூடியது. இவ் நிர்வாக குழு கூடி பல விடயங்களை ஆராய்ந்து பரிசீலனைகளையும் செய்தது. செனட் மாசபையின் பரிந்துரையின் பிரகாரம் செயளாளராக திரு. நோயல் விமலேந்திரன் நிர்வாக குழு முன்பாக தமது பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவர் யாழ்ப்பாண கல்லூரி அதிபராகவும் செனட் மாசபையின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கின்றார் என்பதும் குறிப்பிடதக்கது. இவ் நிர்வாக குழுவானது ஆதீனத்தின் சபாசங்கம் எவ்விதமான தடைகளும் இன்றி சுதந்திரமாக இயங்கும் நிலை காணப்படும் வரைக்கும் ஆயருடன் இணைந்து பணிகளை மேற்கொள்ளும்.

### திருச்சபைகள் சந்திப்பு:

06-12-2006 அன்று மாலை 4 மணிக்கு எமது நீண்ட பாரம்பரியமிக்க திருச்சபைகளில் ஒன்றானதும், எமது மிசனரிமார்களின் ஆரம்ப பணிக்களங்களில் முதன்மையானதுமான தெல்லிப்பளை ஆலயத்தில் நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு ஆயரின் தலமையில் நடைபெற்றது. இவ்வழிபாட்டில் எமது ஆதீனத்தின் குருமார்கள் பலரும் தெல்லிப்பளை சபையின் நீண்டகால அங்கத்தவரான திரு. இயேசுபாலன் அவர்களும் முப்படைகளையும் சார்ந்தவர்களும் கலந்து கொண்டது மாத்திரமன்றி வழிபாட்டின் இறுதியில் தேனீர் விருந்து ஒன்றினையும் ஒழுங்கு செய்து இருந்தனர். தெல்லிப்பளை ஆலயத்தின் இன்றைய நிலையானது வேதனையளிப்பதாக இருந்தது. ஆலயத்தின் முன்பாக பெரிய மரங்களும் ஆலம் விழுதுகளும் தோன்றி காட்சியளிக்கின்றது. கல்லறைத்தோட்டமானது இருந்த இடமே தெரியாத வண்ணமாக இப்பில் மரங்களினால் மூடப்பட்டுக் காணப்பட்டதை கண்ணுற்ற ஆயர் வேதனையுடன் படைத்தலமையிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கல்லறைத்தோட்டத்தைச் சீரமைத்தும், ஆலயத்தைப் புனரமைத்தும் தருவதாக வாக்களித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை 10ம் திகதி வழிபாட்டை சாவகச்சேரி திருச்சபையில் ஆயர் நடாத்தினார். ஆராதனை நிறைவில் சாவகச்சேரி மற்றும் உசன் திருச்சபைகள் இணைந்து புதிய பேராயரை வரவேற்கும் வைபவத்தை நிகழ்த்தினர். உசன் திருச்சபை சார்பாக திருமதி மகாரத்தினமும், சாவகச்சேரி திருச்பை சார்பாக வைத்திய கலாநிதி வீ.ஆர். டேவிட் அவர்களும் பேராயரை வரவேற்றுப் பேசினர். பேராயர் ஜெபனேசனும், அருட்திரு ரி.எச். வசந்தகுமாரும் உரையாற்றினர். யாவரும் ஐக்கிய காலை உணவிலும் கலந்துகொண்டனர்.

ஞாயிற்றுக்கிழமை 17ம் திகதி அராலி திருச்சபையில் அருட்திரு ரி.ஈ. அசோக்குமார் நடாத்திய ஆராதனையில் ஆயர் கலந்துகொண்டு அருளுரையாற்றினார். திருச்சபை மக்கள் உற்சாகத்துடன் ஆயரை வரவேற்றனர்.

### இதர நிகழ்வுகள்:

07-12-2006 அன்று யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனமும், விவசாயக் கல்லூரியும் இணைந்து தொழில் நுட்ப நிறுவனததின் 'ஆபேல்' மண்டபத்தில் புதிய ஆயரை வரவேற்கும் வைபவத்தை ஒழுங்கு செய்தனர். விவசாயக் கல்லூரியின் அதிபர் திரு. குகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுனர் சங்கத் தலைவர் அறிவர் எஸ். ஜெபநேசன் தொடக்க வுரையை நிகழ்த்தியதைத் தொடர்ந்து, தொழில் நுட்பக்கல்லூரியின் இயக்குனர் திரு. நோயல் கூல், அந்நிறுவன ஆசிரியர் திரு. இராஜ்குமார், விவசாயக் கல்லூரி அதிபர் திரு. குகதாசன், இக்கல்லூரியின் சிரேட்ட விரிவுரையாளர் திரு. கந்தசாமி ஆகியோர் பேராயர் தியாகராஜாவை வரவேற்றும் வாழ்த்தியும் உரையாற்றினர். பேராயர் தனது பதிலுரையில் நிகழ்வை ஒழுங்குசெய்த இரு நிறுவனத்தினருக்கும் நன்றி கூறினார்.

யாழ்ப்பாணக் கல்லூரியினரால் 10ம் திகதி நடாத்தப்பட்ட இறைவருகை இன்னிசை வழிபாட்டில் கலந்துகொண்ட பேராயர் நிறைவு செபத்தில் அனைவரையும் வழிநடத்தி இறை யாசியை வழங்கினார்.

08-12-2006 அன்று நடைபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையின் கூட்டத்திலும் பேராயர் கலந்துகொண்டார்.

### சந்திப்புக்கள்:

06-12-2006 காலை பத்து மணியளவில் யாழ். பல்கலைகழகத்தில் அதன் துணைவேந்தர் பேராசிரியர் குமாரவடிவேல், மற்றும் பீடாதிபதிகளுமான பேராசிரியர் கந்தசாமி, பேராசிரியர் சிவச்சந்திரன் ஆகியோர் ஒன்றாக இணைந்து ஆயரை வரவேற்று சம்பிரதாயபூர்வமான ஒரு கலந்துரையாடலினை மேற்கொண்டனர். இச்சந்திப்புக்கூடாக எமது ஆதீனத்துடன் பல்கலைக் கழகத்திற்கு இதுவரையிலும் இருந்து வந்த உறவானது மேலும் வலுப்பெற்றது என்று கூறிக் கொள்ளலாம்.

மரியாதையின் நிமித்தமாக கத்தோலிக்க திருச்சபை ஆயர் கலாநிதி தொமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையையும், தெல்லிப்பளை துர்க்கா தேவஸ்தான இயக்குனர் துர்க்கா துரந்தரி டாக்டர் தங்கம்மா அப்பாக்குட்டியையும், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளையும், அங்கிலிக்கன் திருச்சபையின் யாழ்ப்பாண ஆர்ச்டிக்கன் அருட்திரு எஸ்.பி. நேசக்குமார் அவர்களையும் பேராயர் சந்தித்து மதங்களின் நல்லிணக்கம் மற்றும் இக்காலப் பகுதியில் அனைத்து மதங்களும் சேர்ந்து ஆற்றவேண்டிய சமாதான முயற்சிகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடினார். ஆயர் சவுந்தர நாயகம் பேராயருக்கு அன்பளிப்பு வழங்கியும், நல்லை ஆதீன முதல்வர் பொன்னாடை அணிவித்தும் கௌரவம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

**யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவ மையம்:** யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவ மையத்தின் நிருவாகக் கூட்டம் 14-12-2006 அன்று நடைபெற்றது. அங்கிலிக்கன் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை மற்றும் தென் இந்திய திருச்சபை ஆகியோர் இணைந்து நிருவகிக்கும் இம்மையத்தின் நடப்புவருடத் தலைவர் பொறுப்பை பேராயர் தியாகராஜா ஏற்று கூட்டத்தை நடாத்தினார். இம்மையததின் பொறுப்புக்குருவாக இம்முறை யாழ். ஆதீனத்தைச் சேர்ந்த அருட்திரு வீ.எஸ். பத்மதயாளன் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: 'இறையாளன்'

"நில எல்லைகளற்ற செய்தியாளர்கள் பவுண்டேஷன் டி பிரான்ஸ் பரிசு—2006" என்ற சர்வதேச விருது. யாழ். குடாநாட்டில் வெளியாகும் **உதயன் பத்திரிகைக்கு** வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் உதயன் பத்திரிகையும். மியன்மார். லெபனான். ரஷ்யா ஆகிய நாடுகளின் பத்திரிகைகளுமே இந்த விருதைப் பெற்றுள்ளன.

"எதையும் உன்னால் செய்ய முடியாது என்று மலைக்காதே. செய்யமுடியும் என்று துணிவாய் செய். இலகுவாய் முடியும்.
— வெற்றியாளன்

## தாரகைக் குறிப்பு :

***யாழ்.தென்னிந்தியத் திருச்சபையின் குருமார்களே! சபை மக்களே! வாலிபர்களே! சிறுவர்களே!***

***உங்கள் இறையியல், இலக்கியம் சார் ஆக்கங்களை எமது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.***
***-ஆசிரியர்***

"நாம் சிலரை வெறுப்பதற்குக் காரணம் அவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாதது தான். அவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாததற்குக் காரணம் நாம் அவர்களை வெறுப்பது தான்.
— ஏப்ரானிஷ் அறிஞர்

## வாலிபர் பகுதி:

### போலிச் சந்தோஷம்

ஒருநாள் ஒரு மனிதன் டாக்டரிடம் சென்று, "ஐயா, நான் சந்தோஷமற்றவனாகவும் தனிமை யாகவும் இருக்கிறேன், நான் சந்தோஷமுள்ள வனாக மாறிட ஏதாவது ஆலோசனை சொல்லுவீர்களா?" என்று கேட்டான். அதற்கு அந்த டாக்டர்: "பக்கத்து ஊரில் ஒரு சிறந்த சர்க்கஸ் நடைபெறுகிறது. அதில் ஒரு கோமாளி எல்லோ ரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்துச் சந்தோஷப் படுத்துகிறான். தனிமை உணர்வையும் போக்கிவிடுகிறான். அங்கு சென்று பாரும்" என்று ஆலோசனை கூறினார்.

இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அம்மனிதன், "ஐயா, நான்தான் அந்தக் கோமாளி" என்றான். டாக்டர் வியப்பிலாழ்ந்தார்.

ஆம்! எத்தனையோ பேரை சிரிக்கவைத்துச் சந்தோஷமடையச்செய்யும் கோமாளியால் சந்தோஷமாயிருக்க முடியவில்லையே. ஏன்??? அவனிடம் மெய்யான சந்தோஷம் இல்லை. அவனது தமாஷைக் கேட்போரும் நிலையற்ற சந்தோஷமே பெற்றனர். போலிச் சந்தோஷம் கானல் நீராக காட்சி தந்து, மனிதனை ஏமாற்றி மறைந்து விடுகின்றது.

சாலொமோன் அரசன் அக்காலத்தில் வாழ்ந்த மிகப்பெரும் செல்வந்தர்களில் ஒருவர். அவர், தான் உலகப்பொருட்களால் மெய்யான சந்தோஷமடைய முடியவில்லை என்பதைப்பற்றி அவரே பின்வருமாறு கூறுகின்றார்.

*"நான் பெரிய வேலைகளைச் செய்தேன், எனக்காக வீடுகளைக் கட்டினேன், திராட்சத்தோட்டங்களை நாட்டினேன். எனக்காகத் தோட்டங்களையும் சிங்காரவனங்களையும் உண்டாக்கி, அவைகளில் சகலவகைக் கனிவிருட்சங்களையும் நாட்டினேன். மரங்கள் பயிராகும் தோப்புக்கு நீர்ப்பாய்ச்சு கிறதற்குக் குளங்களை உண்டு பண்ணினேன். வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் சம்பாதித்தேன், வீட்டிலும் வேலைக்காரர் பிறந்தார்கள், எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஆடு மாடு முதலான திரண்ட ஆஸ்திகள் எனக்கு இருந்தது. வெள்ளியையும் பொன்னையும், ராஜசம்பத்தையும் மாகாணங்களிலுள்ள பொருள்களையும் சேகரித்தேன், சங்கீதக்காரரையும் சங்கீதக்காரிகளையும், மனுபுத்திரருக்கு இன்பமான பலவித வாத்தியங்களையும் சம்பாதித்தேன். எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன், என் ஞானமும் என்னோடேகூட இருந்தது. என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை, என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை, நான் செய்த முயற்சிகளிலெல்லாம் என் மனம் மகிழ்ச்சி கொண்டிருந்தது, இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றினாலும் எனக்கு வந்த பலன். என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன், இதோ எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது, சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை."* (ஒப்புநோக்கல்: பிரசங்கி 2:4-11)

எலிபிடிக்கும் பொறியைப் பார்த்திருக்கிறீர்களா? அதனுள்ளே வைக்கப்பட்டிருக்கும் சிறியதேங்காய்த் துண்டுக்காக எலி உள்ளே நுழைகிறது. அத்தேங்காய்த் துண்டை சாப்பிடுகிறது. ஆனால், அந்தோ பரிதாபம்! சில நிமிடங்களில் அது அங்கேயே கொல்லப்படுகிறது. இதுபோன்றே தீமையானவன் நிலையற்ற சந்தோஷத்தை நமக்களித்து, நிரந்தர வேதனையைத் தருவதற்கு இப்பூவுலகெங்கும் பொறி வைத்துள்ளான். அற்ப நிமிட சந்தோஷத்திற்காக அவனது வலையில் சிக்கி மடிவோரின் தொகை எண்ணுக்கடங்காதவை. இதனைக் குறித்துச் சிந்திப்போம். செயலாற்றுவோம்.

**தேவன் நம் பக்கம் இருக்கும்போது எவன் நமக்கு என்ன செய்யமுடியும்.**

"நாளை நாளை என்று சோம்பேறிகள் மட்டும் தான் சொல்வார்கள். இன்றைய நாளின் அருமையை உணர்ந்தவர்கள். இதோ! உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். — வெயிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாரகைச் செய்திகள்:

மலையகத்தின் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமக்கு நியாயமான சம்பள உயர்வான 300 ரூபா கோரி போராட்டத்தில் 14 நாட்களாக ஈடுபட்டனர். மெதுவாக பணி செய்தல், கறுப்பு பட்டி அணிதல், சாத்வீக போராட்டம், ஆர்ப்பாட்ட பேரணி, கையொப்பம் திரட்டல், கடையடைப்பு போன்ற பல்வேறு கவனயீர்ப்பு போராட்டங்களால் மலையகம் பல நாட்களாக ஸ்தம்பித நிலையை அடைந்தது. அரசானது தோட்டத்தொழிலாளர்கள் சங்கத்துடன் 19.12.2006 இல் இரண்டு வருடங்களுக்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. அதில் 260 ரூபா சம்பள உயர்வுவை வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் அவர்கள் 15. 12. 2006 அன்று பிற்பகல் கொழும்பில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் வாகரைப்பகுதியில் மோதலில் சிக்கியுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்படுவது குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது. இப்பகுதிகளுக்கு உணவு பொருட்களுக்கு தடையேற் பட்டிருப்பதனால் மக்கள் பட்டினியை எதிர்நோக்கி யுள்ளனர். இதனால் அப்பகுதிகளிலிருந்து 14000 மக்கள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இடம்பெயர்ந் துள்ளனர்.

"சிக்குன் குனியா" காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஒரு வீட்டிலுள்ள எல்லோரையும் தாக்கிவருகிறது. இக்காய்ச்சல் 3—7 நாட்கள் வரை நீடிக்கிறது. 7 நாட்களைவிட கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்ளும் உள்ளனர். சிலர் 2 வது தடவையாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும் வேதனைகளையும், துன்பங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்து வருகின்றனர். இப்படியும் ஒருகாய்ச்சலா? என உயிருடன் போராடியவர்களும் உண்டு. அரச, தனியார் வைத்தியசாலைகள் நாள்தோறும் நிரம்பிவழிகிறது. யாழ்ப்பாணத்தில் இதன் வேகம் அதிகமாகவுள்ளது. இதனால் தாக்குண்ட பல வயோதிபர்கள் மரணமாகியுள்ளனர. ஒரு பனடோல் குழிகையின் விலை 25—30 ரூபாய் ஆகவிருப்பதனால் மக்கள் பெரும் அவலத்திற்குள்ளாகி யுள்ளனர். இச்சிக்குன் குனியாவானது சிக்கின் குனியா என தவறாக உச்சரிக்கப்படுவதனால் பல இடங்களில் கோழிஅழிப்பு நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிபுணர் குழுவின் யோசனைகளை இனவாதக் கட்சிகள் எதிர்ப்பதனால், அதனை பெரும்பான்மை பலமுடைய எதிர்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவளித்தபோதிலும், அதனைக் கைவிடும் நிலையில் அரசுள்ளதாக அறியப்படுகிறது.

பிரிட்டனின் பாதுகாப்பான நாடுகள் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளதாக பிரிட்ஷ் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இதனால் பிரிட்டினில் புகலிடம் கோருவோருக்கு சாதகமான நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கிலிருந்து புலிகள் விரட்டியடிக்கப்படுவர் என இலங்கையின் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்ததையடுத்து, கிழக்கில் புலிகளைத்தாக்க முயன்றால் முழு அளவிலான யுத்தம் வெடிக்கும் என விடுதலைப்புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ராய்ட்டர் செய்தி சேவைக்கு அளித்தள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் 22.12.2006 அன்று இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கை டில்லியில் சந்தித்து, ஈழத்தில் பட்டினிச்சாவு, இனப்படுகொலை, ஷெல்த்தாக்குதல், விமானக்குண்டுவீச்சு, போக்குவரத்துத்தடை, விரட்டியடிப்புக்கள், கடத்தல்கள், காணாமல்போதல் என தமிழ்மக்கள் படும் மனிதப் பேரவலத்தை விளக்கமாக எடுத்துக்கூறி, சமாதானதீர்வு ஒன்றைக் காண்பதற்கு இலங்கை அரசிற்கு இந்தியா கடமையான அழுத்தத்தை கொடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

இலங்கையில் மோசமடைந்துவரும் மனித உரிமை நிலவரம் குறித்து கவலை தெரிவித்த இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் , தமிழர்களின் பாதுகாப்பையும், அபிலாசைகளையும் பூர்த்திசெய்யக் கூடியதான அரசியல் தீர்வைக் காண்பதற்கு இந்தியா முடிந்தவரை உதவும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் மோசமடைந்துவரும் தமிழ்மக்கள் மீதான மனிதஉரிமை மீறல்கள் உடனடியாக நிறுத்தப்படவும், சமாதான தீர்வு எட்டப்படவுமென இந்தியாவில் 22.12.2006 அன்று மனிதச்சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது.

தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியின் வேண்டுகோளிற்கு இணங்க இலங்கையில் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சை, இந்தியாவிற்கு அகதிகளாக புலம்பெயர்ந்துள்ள இலங்கைத்தமிழ் மாணவர்களுக்கு தமிழகத்தில் நடாத்தப்பட்டது. அம்மாணவர்கள் கலைஞருக்கு நன்றி தெரிவிப்பதற்கு சென்று சந்தித்தபோது, ஈழத்தமிழர்களைச் சந்திப்பதற்கு தான் பல முறை முயன்றபோதும் இலங்கை அரசும், இந்திய அரசும் அனுமதி தரவில்லையென குற்றம் சாட்டினார். இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் தமிழ்மக்ளை உறவினர்போல் உபசரிக்கும்படி தமிழக மக்களுக்கு கலைஞர் வேண்டுகோளொன்றை முன் வைத்துள்ளார்.

இலங்கையின் எதிர்காலப்பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் நம்பிக்கையற்றிருப்பதாக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன்ஸ் ஸடார் புதுடில்லியில் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இம்முறை கிறிஸ்மஸை வடக்கில் வெள்ளைக் கிறிஸ்மஸ் ஆக வெள்ளை உடையணிந்து கொண் டாடுமாறு கிறிஸ்தவ சமூகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அடுத்தவருட முற்பகுதியில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## நினைவு கூறுவோம்

- 7 MAY 2007



கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் 14. 12. 2006 இல் லண்டனில் காலமானார். அவரின் மறைவினால் உலக தமிழினமே பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது. இவரின் குறித்து சில தலைவர்களின் அறிக்கை குறிப்புக்கள் பின்வருமாறு:

"தேசத்தின் குரல்" பாலாவின் இழப்பு தமிழீழ தேசத்திற்கே இட்டு நிரப்ப முடியாத பேரிழப்பாகும்.

—விடுதலைப் புலிகளின் தலைவர்.

தன் நோயின் வேதனையைவிடவும் ஈழத்தமிழர்கள் படும் வேதனையே அவரைப் பெரிதும் வாட்டியது.

—தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி

சர்வதேச சமூகத்தின் முன்னால் இலங்கை தமிழரின் போராட்ட நியாயப்பாடுகளை எடுத்துரைப்பதில் சளைக்காமல் முன்னின்று உழைத்தவர்.

—மேலக மக்கள் முன்னணி

சிறுபான்மைத் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பு வியக்கத்தக்கது.

—மலையக மக்கள் முன்னணி

இலங்கையின் மிக நீண்டகாலப்பிரச்சனையான இனநெருக்கடித் தீர்வு முயற்சிகளுக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை தோற்றுவிப்பதற்கு பல தடவைகள் முன்னின்று உழைத்தவர்.

—இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஒரு புரட்சிகர தமிழ்த் தேசியவாதி. ஒரு அவர் தமிழ் மக்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக போராடிய போராளி. —இடது சாரி முன்னணி

நெருக்கடியான காலகட்டத்தில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் காலமான செய்தி தமிழீழ சுதந்திர தாயகப் போராட்டத்தை முன்னெடுப்பதிலும், அதற்காக பணியை துரிதப்படுத் துவதுமே அவருக்கு தமிழ் கூறும் நல்லுலகம் செய்யும் பணியாகும். — தொழிலாளர் விடுதலைமுன்னணி


தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்துமே பெரும் சோகத்தில் வீழ்ந்திட்ட கட்டாயம் இதன் மூலம் ஏற்பட்டுவிட்டது.

— வீரமணி

ஈழத்தமிழர்களுக்காக உறுதியாக வாதாடியவர். அவரின் மறைவின் மூலம் உருவான வெற்றிடத்தை யாராலும் இட்டு நிரப்ப முடியாது. — பழ. நெடுமாறன்

சுயமரியாதைக்காகவும் அரசியல் உரிமைகளுக் காகவும் போராடும் ஈழத்தமிழர்களுக்கு அவரது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும். —டாக்டர் ராமதாஸ்

நோய்வாய்ப்பட்ட நிலையிலும் அமைதி சமாதானம் ஆகியவற்றுக்காக சர்வதேச அளவில் சுற்றிச் சுழன்று பணியாற்றிய ஓய்வறியாத போராளி. காலம் அவரை பிரிந்து விட்டாலும் பறித்துக் கொண்டாலும் களம் அவரைப் பின்பற்றி வாகை சூடும். —திருமாவளவன்.



**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!**

**நாங்கள் எமது வேற்றுமைகளை மறந்து, எமது தேவனுக்கு மகிமையும், எமது தேசத்திலே அமைதியும், எமது மக்களிடையே புரிந்துணர்வும், எமது சபைகளில் ஐக்கியமும் நிரந்தரமாக கிடைக்கவேண்டி இறைவேண்டல் செய்வோமாக.**

**"தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை.." -- லூக்கா 1:37**

"மனித சமூகம் அனைத்தின் நன்மைக்காக நாம் பிறந்துள்ளோம் என்று கருதவேண்டும்." — செனீகா.

"தோல்வியை கண்டு அஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகிவிடுகின்றது. சோம்பலின் விளைவு வறுமை. முயற்சியின் விளைவு மூலதனம்." — வெஸ்லியான்

"பதினாறு வயதில் அழகாய் இருப்பதில் உனக்குப் பெருமை ஒன்றும் இல்லை. அறுபது வயதில் அழகாய் இருந்தால் அது உன் ஆன்மாவின் தனிப்பட்ட சாதனை." — மேரிஸ்ரிஸ்டோப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடூர நினைவுகள்!

ஏய்! சுனாமியே! ஏய்! சுனாமியே!
என் தாய் உந்தனுக்கு என்னசெய்திட்டாள்?
என் தந்தை உந்தனுக்கு என்னசெய்திட்டான்?
—ஏய்! சுனாமியே!

என் அக்கா எங்கே தெரியலையே
என் அண்ணன் போனவன் திரும்பலையே
என் தம்பி அழுகை கேட்கலையே
என் தங்கை சிரிப்பொலி காணலையே
—ஏய்! சுனாமியே!

என் உற்றார் எங்கே புரியலையே
என் உயிர் என்னிடம் மீளலையே
உடைந்த கட்டடம் எழுகிறது
இழந்த எம் உறவுகள் சேர்ந்திடுமோ?

இயேசு சுவாமியே! இயேசு சுவாமியே!
என் தாய் எந்தனுக்கு நீர் அல்லவோ!
என் தந்தை எந்தனுக்கு நீர் அல்லவோ! —பூமாலை

## தாரகைத் திருச்சபை:

'*தாரகைத்திருச்சபை*' எனும் பகுதிக்கு உங்கள் திருச்சபையின் ஆரம்பம், ஆலயப்படம், திருச்சபையின் வளர்ச்சிக்காக பணியாற்றிய அன்பர்கள், திருச்சபையின் பணிகள், சாதனைகள், அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் அதன் வளர்ச்சியும், ஓய்வு நாட்பாடசாலை, வாலிபர் சங்கம், பெண்கள் ஐக்கியம் போன்றவற்றின் செயற்பாடுகள், பணியாற்றிய குருமார்களின் விபரங்கள், திருச்சபையின் எதிர்காலத் திட்டங்கள், போர்க்காலச் சூழல், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது திருச்சபையின் பணிகள் போன்ற விபரங்களை எழுதி, உங்களது சபைக்குருவானவரின் உறுதிப்படுத்தலுடன், கீழுள்ள முகவரிக்கு அனுப்புங்கள்.

**ஆசிரியர்,**
**உதயதாரகை,**
**17 , பிரான்சிஸ் வீதி,**
**கொழும்பு 06.**
e-mail: *morningstar_csi@yahoo.com*

## வாகரையில் ஒரு சா'கரை —பூமாலை

**வாகரையில் எம்மக்கள்**
**சா'கரையில் கிடக்கிறார்.**
**பாதை மூடிக்கிடப்பதனால்**
**பசியால் மக்கள் சாகிறார்.**
**ஷெல் வீச்சுத்தொடரினால்**
**சின்னாபின்னமாகிறார்.**

**நாளும் உயிர் தப்பவே**
**ஓடி வழியில் சாகிறார்.**
**மரநிழலில் அவர் படுத்து**
**மரம் தளிர் அவர் உண்கிறார்**
**மழையும் நோயும் துரத்துவதால்**
**கூனிக்குறுகி மாய்கிறார்.**

## நாங்கள் ே(வ)கள்விக்குறிகள்???

—எஸ்.பி.குணசீலன் (விம்பம்)

"நாள்தோறும் எங்களுக்கு புதுவருடம் தான்!
ஏனெனில்,
வானிலே வேடிக்கை, காதினிலே வெடியோசை,
இரவினிலே விழிப்பிருப்பு என்று
புதிதாய்ப்புகும் ஆண்டிற்காய்
காத்திருக்கும் மக்கள் போல்
காத்திருக்கின்றோம்............. எம் சாவினிற்காய்.
உணவில்லை எம்க்கு
உடுப்புடவைகள் சீராயில்லை
உறைவிடம் எதுவுமில்லை
உறவுகள் எல்லாம் இல்லை
ஊசி மருந்துகள் அறவே இல்லை
உணர்வில்லை — இப்போது
உங்கள் உயிர் எங்களிடமில்லை
மொத்தத்தில் நாங்கள்
நடைபிணங்களாக உலாவருகின்றோம்.
"செஞ்சிலுவை சங்கத்தார்
உணவுடன் வருகின்றார்கள்" என்று
முண்டியடித்து ஓடி.
அது அம்புலன்ஸ் என்றதும்
அவமானத்தால் ஏமாந்து.
நொந்து போகின்றோம்.
பதுக்கலும், கள்ளச்சந்தையும்
எங்களுக்குள்ளே இருப்பதால்
ஏங்கிப்போகின்றோம்.

பிள்ளைகளின் படிப்புக்கள் எல்லாம்
என்ன ஏதோ என்று
முடியாமல் முடிகின்றது.
பிள்ளைகளைத்தேடும் பெற்றோரும்
பெற்றோரைத்தேடும் பிள்ளைகளும்
எங்களிடம் நிறையவே இருக்கின்றார்கள்.

எங்கள் முகவரிகள் இப்போது
மரங்களும் பற்றைகளும் தான்.
சிலநேரங்களில் எங்கள் முகவரிகளை
நாங்களே தேடவேண்டிவரும்.
மழையும் வெய்யிலும் எங்களுக்கு
சிறிதளவு இரக்கம் காட்டுவதால் தான்
நாங்கள் இன்னமும் உயிருடன் இருக்கின்றோம்.

நோய்கள் எங்களில் பாதிப்பேரை
கட்டிப்பிடித்திருக்கின்றது.
எங்கள் வாழ்க்கையே
கேள்விக்குறிகளால் அடுக்கிக்கிடக்கின்றது.
அவற்றிற்கு நாம் விடைதேடிக்
காத்திருக்கின்றோம்.

இப்படி நாளும் .......................
எம்மவர்கள் வாடிப்போகின்றார்கள்.
கட்டிய துணியுடனும்
கையிலே கிடைத்தவற்றுடனும்
காடுவயலென்று
நாம் "காலத்தால்" விரட்டப்படுவது
இன்று வரலாறாகிவிட்டது....

இந்நேரத்தில்
எம்மவர்களை ஆதரிப்பதும் கைகொடுப்பதும்
எம் தலையாய பொறுப்பன்றோ!
இதை நினைத்துப்பலரும்
சங்கங்கள் பல ஊடாய்
புரிகின்றார் சமூகப்பணி.

இவற்றுள்
"தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம்"
கடவுளின் ஆசீர்வாதமே.
"நாங்கள் புசித்திருக்கும்போது
எவனொருவன் பசித்திருக்கின்றானோ
அவனையும் ஒருகணம்
நாம் நினைத்திருப்போம்."

அன்றாட தேவைக்காய்
அல்லல்படும் அவர்களுக்கு
எம்மால் உறையுளைத்தான்
வழங்கக்கூடாதுவிடினும்
உணவு, உடை, மருந்துகளை
அள்ளித்தரலாமல்லோ!
இல்லாவிடினும்
கிள்ளித்தரலாமல்லோ!!

கேள்விக்குறிகளாய்????
வேள்ளவிப் பொருட்களாய்????
வாழ்க்கை வரங்கள் வேண்டி
காத்துக்கிடக்கும் எங்கள்
துயருறும் உள்ளங்களை
எங்கள்
உதவிக்கரங்கள் நீட்டி
அள்ளி அணைத்துக்கொள்வோம்.
கிள்ளி மகிழ்ந்துகொள்வோம்.

எங்கள் கரங்களைக் கண்டு
அவர்கள் துயரங்கள் மறையட்டும்...
அவர்கள் வாழ்க்கை பூக்கட்டும்...
அவர்களின் கேள்விகளுக்கு
நாங்களே விடையாவோம்........

## சிறுவர் பகுதி:



### புரிந்துகொள்ளவில்லை

ஒரு வகுப்பில் கணக்குப் பாடம் நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் ஒரு மாணவனிடம் "நான் உன் அப்பாவுக்கு 1000 ரூபாய் பணம் கொடுத்தேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதில் அவர் ஒவ்வொரு மாதமும் எனக்கு 100 ரூபாய் திருப்பிக்கொடுக்கிறார். அப்படி ஆறு மாதம் கொடுத்த பிறகு அவர் மீதி எவ்வளவு பணம் எனக்குத் தரவேண்டியிருக்கும்." என்று ஒரு கணக்கைக் கொடுத்து விடை கேட்டார்.
உடனே அம்மாணவன் "அவர் உங்களுக்கு 1000 ரூபாய் தர வேண்டியிருக்கும்." என்றான்.
"உமக்கு கணக்கு புரியவில்லையே." என்றார் ஆசிரியர்.
"சார், உங்களுக்கு என் அப்பாவை புரியவில்லையே. என் அப்பா வாங்கிய கடனை ஒருபோதும் திருப்பி தரவேமாட்டார்" என்றான் மாணவன்.

**சிறுவர்களே! சிறுவர்களே!!**
**தாரகையில் வரும் திருமறை பற்றிய தகவல்களை கவனமாகப் படித்து தாரகையில் வரவிருக்கும் திருமறை வினாப்போட்டியில் பங்குபற்றி *கேடயம்* ஒன்றைப் பரிசாகப்பெற்றுக் கொள்ளுங்கள்.**

### திருமறை பற்றிய விமர்சனம்

1. புத்தகங்களுக்கெல்லாம் புத்தகம் என்றழைக்கப்படும் புத்தகம் நானே!
2. தேவனால் எழுதப்பட்ட புத்தகம் நானே!
3. இரண்டு பகுதிகள் - 66 புத்தகங்கள்
4. 1600 வருடங்களுக்கும் மேலாக 40 எழுத்தாளர்கள் மூலமாக எழுதப்பட்டேன். 5. ஆனாலும் நான் ஒரே ஒரு புத்தகம் தான்.
6. என்னுடைய மிகப் பெரிய விஷயம் - கிறிஸ்துவே.

### புதிர்-05:

நிபந்தனைகள் :

1. ஆர்வமுள்ள எமது திருச்சபை சிறுவர்கள் எவரேனும் பங்கு பற்றலாம்.
2. ஒருவர் ஒரு விடை மட்டுமே அனுப்பலாம். "A4" அளவுடைய வெள்ளைத்தாள் ஒன்றில் " ***இன்றைய நத்தார் மரம்*** " எனும் பொருளில் வர்ணச்சித்திரமொன்றை வரைந்து அனுப்புங்கள்.
3. விடைகள் தபால் உறைக்குள் வைக்கப் பட்டு, உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**புதிர்-05**" என எழுதப்படல் வேண்டும். உள்ளே **உங்கள் பெயரும்; முகவரியும், திருச்சபையின் பெயரும்** குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
4. உங்கள் விடைகள்
   ***"ஆசிரியர், உதயதாரகை,***
   ***இல.17,பிரான்சிஸ் வீதி,***
   ***கொழும்பு -06 "***
   என்ற முகவரிக்கு **25.01.2007** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்.
5. ஆசிரியரின் முடிவே இறுதியானதாகும்.

"வாழ்க்கைக் கணக்கில் நண்பர்கள் கூட்டப்படுகின்றனர். எதிரிகள் கழிக்கப்படுகின்றனர்கள். மகிழ்ச்சி பெருக்கப்படுகின்றது. அன்பு வகுக்கப்படுகின்றது." - வெற்றியாளனி.

"நன்மையை நூறுபேர் விரும்புவார்கள். ஆனால் உண்மையைச் சிலரே விரும்புவார்கள்.". — காந்தியடிகள்.

"வாய்ப்பு தானாக வருவதில்லை. மனிதன் தானே உண்டு பண்ணிக்கொள்ள வேண்டும்." —பெர்னாட்ஷா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 7 MAY 2007



## The story behind "Silent Night"

**"And there were shepherds living out in the fields nearby, keeping watch over their flocks at night"**
— Luke 2:8

### How the world's most famous Christmas carol came to be written

*While we were serving as missionaries in Europe we visited a small little church in Austria. That church was the birthplace of "Silent Night." Here's the story how this most famous of Christmas carols came to be written:*

In 1818, a roving band of actors was performing in towns throughout the Austrian Alps. On December 23 they arrived at Oberndorf, a village near Salzburg. There they were scheduled to perform the story of Christ's birth in the Church of St. Nicholas.

Unfortunately, the St. Nicholas' church organ wasn't working and would not be repaired before Christmas. (*Note: some versions of the story point to mice as the problem; others say rust was the culprit*) Because the church organ was out of commission, the actors presented their Christmas drama in a private home. That Christmas presentation put assistant pastor Josef Mohr in a meditative mood. So, instead of walking straight to his house, Mohr took a longer way home. The longer path took him up over a hill overlooking the village.

From that hilltop, Mohr looked down on the peaceful snow-covered village. Reveling in the wintry night's majestic silence, he gazed down at the glowing scene. His thoughts about the Christmas play caused him to remember a poem he had written a couple of years earlier. That poem was about the night when angels announced the birth of the long-awaited Messiah to shepherds on a hillside.

Mohr decided those words would make a good carol for his congregation the following evening at their Christmas eve service. However, he didn't have any music to which that poem could be sung. So, the next day Mohr went to see the church organist, Franz Xaver Gruber. Gruber only had a few hours to come up with a melody which could be sung with a guitar. However, by that evening, Gruber had managed to compose a simple musical setting for Mohr's poem. It didn't matter that the organ was broken. They now had a Christmas carol they could sing without it.

On Christmas Eve, the little Oberndorf congregation heard Gruber and Mohr sing their new composition to the accompaniment of Gruber's guitar.

Weeks later, well-known organ builder Karl Mauracher arrived to fix the St. Nicholas church organ. When he finished, Mauracher stepped back to let Gruber test the instrument. When Gruber sat down, his fingers began playing the simple melody he had written for Mohr's Christmas poem. Deeply impressed, Mauracher took the music and words of "Silent Night" back to his own Alpine village, Kapfing. There, two well-known families of singers — the Rainers and the Strassers — heard it. Captivated by "Silent Night," both groups put the new song into their Christmas season repertoire.

*Silent night! holy night!*
*All is calm, all is bright,*
*'Round yon virgin mother and Child!*
*Holy Infant, so tender and mild,*
*Sleep in heavenly peace,*
*Sleep in heavenly peace.*

The Strasser sisters spread the carol throughout northern Europe. In 1834, after they had performed "Silent Night" for King Frederick William IV of Prussia, that king ordered his cathedral choir to sing it every Christmas eve.

The Rainers brought the song to the United States in 1839, singing it (in German) at the Alexander Hamilton Monument located outside New York City's Trinity Church.

In 1863, nearly fifty years after being first sung in German, "Silent Night" was translated into English (by either Jane Campbell or John Young). In 1871 the English version was published in an American hymnal: Charles Hutchins' *Sunday School Hymnal.*

## The Story Of The Christmas Tree

People often wonder where the custom of having a tree in the home during Christmas time comes from. We will probably never know for sure. But there are several historical clues that point out where this custom came from.

***An Ancient Symbol***

Thousands or years ago, there were people who believed that evergreen trees were magical. Even in winter, when all the other trees and greenery were brown and bare, the evergreen stayed strong and green. People saw the evergreen as a symbol of life and as a sure sign that sunshine and spring would soon return. Candles, or the electric lights we use to decorate our trees today, are also an ancient symbol. They represent the light of spring triumphing over the darkness of winter.

In ancient Rome, people decorated their homes and their temples with greenery during a special December feast. It was a happy time. No battles could be fought, the schools were closed, and people everywhere joined in the carnival-like atmosphere and gave each other presents.

***The Modern Tree***

So when did the Christmas tree go indoors? Legend has it that the tradition was begun by Martin Luther in Germany. He was a monk and church reformer who lived from 1483 to 1546. According to the legend, Luther was returning home one wintry night when he saw the stars twinkling in the sky through the tree branches. Luther was amazed by the sight, and when he arrived home, he was eager to tell his family about it. To help them understand, he went to the woods and cut down a small fir tree. Luther brought it indoors and decorated it with candles, which represented the stars he had seen.

The custom spread in Germany, and from there all over the world. In England, the Christmas tree first appeared when Queen Victoria married Prince Albert, who was German. In 1841, Albert set up a Christmas tree at Windsor Castle near London to remind him of his homeland. The Christmas tree custom was brought to the United States by people from England as well as by many German immigrants who came in the 1800's. Whatever its origin, the Christmas tree is a beautiful symbol for everyone who celebrates Christmas.

***The Legend of the First Christmas Tree***

The night of the Saviour's birth, all the living creatures, both flora and fauna, came to Bethlehem with gifts. The olive tree brought its fruit and the palm its dates. But the little fir tree had no gift and was so tired it couldn't resist when the big trees pushed it into the background and hid it from view. But then a nearby angel took pity and commanded a cluster of stars to come and rest on its delicate boughs. When the Baby Jesus beheld this lovely lighted tree, He smiled and blessed it, declaring henceforth that fir trees should always be filled with lights at Christmastime to please little children.

### A Question

O Lord,
Age after age,
Thou hast sent thy messengers to this pitiless world.
They proclaim:
'Remove all ill-will from your hearts,
Forgive and love.'
They are our masters.
And in reverence we cherish their memories.
Yet, on this evil day, I have turned them away
With an empty salutation.

I have seen:
Malice cunningly kill the helpless,
An insolent Might smother the voice of Justice,
Weeping in solitude!
I have seen:
Tender youth cry out in frenzied agony,
Dashing its head against the cold stone!

Today my voice is choked and mute is my flute-
My world has disappeared in an evil dream.
Therefore with tears I ask thee:
'Those who have poisoned thine air
And extinguished thy light,
Hast thou forgiven them?
Hast thou loved them?'

- Rabindranath Tagore

Often an entire city has suffered because of an evil man. - Hesiod,

The true clergyman is a reflex of his Master. - Andre Dacier

Obedience is the mother of success, the wife of safety. - Aeschylus

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## BREAK THE BREAD , SHARE IT

[ The reflection of a 6 year old child in Jaffna]

Now my appa does not bring anything to me
Nothing is in the shops he says
Why ,how, reason they say I can't understand
Sweets, biscuits, butter, milk powder
Even egg and fish , Where have all these gone?
My love once give calls asking what I want?
A list I used to give, but helpless, no way to send it
Three days ago my friend in my class told me
Her aunt from Colombo sent a parcel by post
Containing Milk powder, Sugar, biscuits, and washing powder
When they opened, a mixture! Sugar with washing powder
But biscuits and Milk powder they enjoyed
My aunt too gave a call to know how we were?
I told her to send Biscuits and Milk powder
But not to send washing powder !
Every morning I waited for the postman
Yesterday morning my appa was late
To buy bread in the queue, but no bread!
I went to school without breakfast
And no snack for the interval
Today as usual the curfew was lifted at 5 A.M
People are in several queues
Queues for ship, food, Kerosene, ect.,
My appa went to the bread queue
And came with a loaf of bread and a plantain
I ate two slices and took two to school
During the interval I opened the Tiffin box
My friend looked at me from the next seat
She had not brought anything to eat
I found she had not eaten breakfast too
She had lost her father, so no one to be in the queue
I broke the bread and shared it with her
I realized that the SAME BREAD
Appa breaks in the Church
I broke in my small class room

- Thaniya Nesakumar

## OBITUARY

Mrs. Daisy Thurairajah of C.S.I. Uduvil, wife of late V.A.Thurairajah, mother of Indra, Padma, Southy, Thevi, Latcho and Swarna expired in Canada. Funeral took palce on the 17th of Nov. 2006.

> I think a bishop who doesn't give offence to anyone is probably not a good bishop. - James Thomson (1)

# DEDICATED TO THE TSUNAMI VICTIMS



## THE WEEPING MERMAIDS

They sing! So they say
Melodious music in harmony
On quiet full moon nights
Surfing up the lagoon waters
The elegant little mermaids
The crest of the coast in the East
The land of lush and green
Are the singing fish indeed!

Night by night at present
They chant, warble and lament
Their voices quaver and tremble
Their cries gracefully mingle
With the wailing of the human preys
Snatched by the monstrous tsunami waves
Lives of clans just in thousands
The sacrifices pure and innocent!

-Sophia

**A Message of Appreciation in memory of Mrs. Ellen Virasinghe**

## Sweet Memories of you will Linger on .......

Mummy has won the promise crown through Gods' Grace for a Christian, death is not the end. It is the prelude to a new and joyous endless life. Most assuredly, mummy still lives on in a new existence, where she is strong and free of pain or sorrow;

She bid Good bye 'to earth this day
"Welcome Home" Jesu did say,
"Heaven's streets are of pure gold
Oh! What beauty I behold
In this place of Great Splendour
I'm with my Redeemer"

A deep concern for others was her main aim in life, always praying and pleading to God for the needs of others. Her sincerity towards God her Greater is a lasting legacy she's left behind. Her loving, long letters, birthday & X'mas wishes were always full of words of encouragement and quotations from the Bible which I very much appreciated. I look for ward to her poems specially composed and sent promptly for my Birthdays each year. In he last letter she had written thanking God for all his blessings and hand mentioned that she was praying for Gods' special blessings on our new home. She was thankful to God for his goodness and loving care at all times.

*Echoes of your hearty voice*
*Visions of your warm smile*
*Memories of your loving ways and words*
*Keep coming back to me*
*I know from Heaven you're looking down*
*And will continue to protect us all.*

Good bye Mummy. Precious memories of you will be with all your loved once forever.

- Sugantha Virasinghe.

> One-fifth of the people are against everything all the time. - Robert F. Kennedy.

## FREEZE

*Lazy and sleepy I woke up late in the morning*
*The previous night's trauma of serpents creeping*
*The moles; and the creatures, 'great and small'*
*Disturbing my sleep, within my house*
*Induced my brain to think and wonder*
*Of these uncommon events I deeply ponder*

*At the well as I enjoyed my cool bath of spring water*
*Soothing my hot anxious head and body,*
*I heard a sound of gush of waters*
*The screams of my people lived close to the sea*
*'The sea is in rage, at the height of a hill,'*
*Run for your lives, lest you may get killed'*

*The 'calm blue sea, as high as a hill'*
*'Unbelievable, never happened in ages*
*Was it the verdict of a person insane?*
*Or of someone's blabber who is in trance?*
*No time to tune my mind to reason out*
*'Cause of the panic and commotion all around!*

*'Go! Wake up your sibling right now*
*Lest she with our habitat could be washed out'*
*Was the command of my widow mom!*
*My teenage body stiff and frozen*
*Wrapped up only with a towel linen*
*Stood still, like an iron icon!*

*A shudder, tremor, and feeling of being soared*
*A sense of going nowhere, but somewhere*
*I saw my pathetic shivering body half naked*
*My sister and mother getting into a wagon*
*A pandemonium of screaming and screeching*
*The waters like a hill up heaving*

*The experience was like a 'roller skater' indeed*
*Twisted, twirled, up and down, pushed and pulled*
*Beaten up, drowned, and stripped me stark naked*
*Helplessly I yielded to its barbarous work*
*Lungs and belly filled with strange water*
*All ended up as I caught a tree and on to it I clung!*


*My nude body camouflaged with the dark tree*
*The black oily water subsided and retrieved*
*With a cough the stinking water within my belly*
*Thrown up as a vomit through my mouth and nostrils*
*The worst embarrassment of all was the oozing*
*Between my thighs, the menstrual blood dripping!*

*For hours to the palmyrah tree was I glued*
*Detached from self and from the world*
*Until a strong young man's hands held*
*My sticky, dirty, body that was soiled*
*Should I protest, for I was just naked?*
*I wish I did, but I was just frozen!*

*He covered my bare breasts with his torn shirt*
*His wet 'sarong' for my exposed lower half*
*And he carried me down and to a safer place*
*Now the scene is just the opposite one*
*A woman in the dress of a young man*
*Saved by a naked young male angel!*

(An experience of one of my clients)

- T.T.



> Prayer moves the Hand which moves the world. - Rev. John Aikman Wallace,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org